ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2207/10 - 2020 දෙසැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.12.24

*2207/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண சபை

ஊவா மாகாணத்தின் எல்ல பிரதேச செயலாளர் பிரிவினுள் சுற்றுலா வலயத்தைப் பெயரிடல்

ஊவா மாகாணத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவினுள் சுற்றுலா வலயத்தைப் பெயரிடல் தொடர்பாக அறிவித்தல் வரைவினை பொது மக்களின் கருத்தினை பெற்றுக் கொள்வதற்காக வெளியிடுகின்றேன்.

02. இவ்வறிவிப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டு 30 நாட்கள் கடந்த பின்னர் இவ் வரைவு அங்கீகரிக்கப்படும் என்பது அறிவிக்கப்படுகின்றது. இவ் வரைவினுள் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதாவது விடயங்கள் முன் வைக்க எதிர்பார்ப்பின் இவ் அறிவித்தல் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் அவ்விடயங்களை எழுத்து மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் எனக்கு அறியத்தர வேண்டும்.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
கௌரவ ஆளுநர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண ஆளுநர் காரியாலயம்,
பதுளை,
2020, திசெம்பர் மாதம் 07.

1A - G 33364 — 25 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஊவா மாகாணத்தின் எல்ல பிரதேச செயலாளர் பிரிவினுள் சுற்றுலா வலயத்தைப் பெயரிடல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 223 ஆவது பிரிவினால் கிடைத்துள்ள அதிகாரத்தின்படி ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய நான் என்னால் கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேசங்கள் எல்ல சுற்றுலா வலயமாகப் பெயரிடப்படுகின்றது என அறிவிக்கப்படுகின்றது.

எல்ல பிரதேச செயலாளர் பிரிவிற்குட்டபட்ட-

1. 68 பீ எல்ல;
2. 69 ஜீ ஹெட்டிபொல;
3. 68 எப் இடமேகம;
4. 69 ஈ கிதல்எல்ல;
5. 68 ஸீ மதுரகம;
6. 68 ஜே நிவ்பர்க்;
7. 69 எப் இராவணா எல்ல;
8. 68 ஈ யஹலேவெல,

ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கீழ்க் குறிப்பிடப்படும் நோக்கங்களை சாதித்துக் கொள்வதற்காக எல்ல சுற்றுலா வலயமாக பெயரிடப்படுகின்றது:-

**நோக்கங்கள்**

1. எல்ல சுற்றுலா வலயத்தினுள் சுற்றுலாத்துறையின் நிலையான வளர்ச்சி.
2. எல்ல சுற்றுலா வலயத்தினுள் உட்கட்டமைப்பை வளர்ச்சியடையச் செய்து உலகளாவிய தரநிலை சுற்றுலா இலக்காக மாற்றல்.
3. சுற்றுலாத்துறையின் தரமான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு சுற்றுலாப் பராமரிப்பு சேவையினை ஒழுங்குபடுத்தலும் கிட்டிய மேற்பார்வையும்.
4. எல்ல சுற்றுலா வலயத்தினுள் வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் சுற்றுலா திருப்தியினை உயர்த்துதல்.
5. சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களின் திடீர் இடர்கள் தொற்று நோய் சந்தர்ப்பங்களில் உதவி செய்ய முன்வருதல்.
6. சுற்றுலாத் துறையின் வளர்ச்சியுடன் ஏற்பட்டுள்ள சுற்றுச் சூழல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.